| தரம் 8 | தி / கிண் / அல் - அஹ்லா வித்தியாலயம்<br>T / Kin / Al – Ahla Vidyalaya | புள்ளி |
|---|---|---|
| புவியியல் | முதலாம் தவணைப் பரீட்சை - 2020 | பகுதி I & II |
| சுட்டெண்: | நேரம் : இரண்டு மணித்தியாலம் | |

- **இப்பகுதியில் அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதல் வேண்டும்.**
- **சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1. சூரியன் தொடர்பில் குறிப்பிடப்படும் விடயங்களில் **தவறானதாக** அமைவது.
   (1). சூரியன் ஒரு நட்சத்திரமாகும்.
   (2). சூரியன் ஒளியினையும் வெப்பத்தினையும் வெளியிடும்
   (3). சூரியன் ஏனைய கோள்களைச் சுற்றிவருகிறது.
   (4). சூரியன் தனது அச்சில் சூழல்கிறது

2. சூரியன் ஒருமுறை தனது சூழற்சிக்கு எடுக்கும் காலம்?
   (1). 35 புவி நாட்கள் (2). 10 புவி நாட்கள்
   (3). 25.4 புவி நாட்கள் (4). 12.5 புவி நாட்கள்

3. புளுட்டோ ஞாயிற்றுத் தொகுதியில் இருந்து நீக்கப்பட்ட ஆண்டு எது?
   (1). 2010 (2). 2009 (3). 2007 (4). 2006

4. ஞாயிற்றுத் தொகுதியின் குளிர்ச்சியான கோளாகக் கருதப்படுவது எது?
   (1). வியாழன் (2). யுரேனஸ் (3). நெப்டியூன் (4). சனி

5. ஞாயிற்றுத் தொகுதியில் வேகமான சுழற்கியினைக் கொண்ட கோள் எது?
   (1). வியாழன் (2). சனி (3). புதன் (4). புவி

- **கீழ் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும், பிழையாயின் (X) எனவும் அடைப்பினில் குறித்துக் காட்டுக.**

6. செங்கோள் என அழைக்கப்படுவது வியாழனாகும் ( )
7. வெள்ளி கோளில் காணப்படும் பிரதான வாயு ஒட்சிசனாகும் ( )
8. ஞயிற்றுத் தொகுதி தோன்றியது 4600 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பாகும் ( )
9. புதன் கோளின் உபகோள்களின் எண்ணிக்கை 2 ஆகும் ( )
10. ஞாயிற்றுத் தொகுதியின் பெரிய கோள் சனி ஆகும் ( )

kalvi.lk

- **சரியான சொற்களை தெரிந்து இடைவெளி நிரப்புக.**

**( 173 , $15^0C$ , கிலோமீற்றர் 11.2 , $464^0C$ , 14 )**

11. புவியின் மேற்பரப்பு வெப்பநிலை .......................................... ஆகும்.
12. புவியினது ஒரு செக்கனின் சுழற்சி வேகம் ..................................... ஆகும்.
13. ஞாயிற்றுத் தொகுதிக்கு உரிய அனைத்து கோள்களுக்குமான உபகோள்களின் எண்ணிக்கை ....................................... ஆகும்.
14. வெள்ளிக் கோளின் சராசரி மேற்பரப்பு வெப்பநிலை ............................................. ஆகும்.
15. நெப்டியுன் கோளின் உபகோள்களின் எண்ணிக்கை ..................................... ஆகும்.

- கீழே தரப்பட்டுள்ள “அ” பகுதிக்குப் பொருத்தமானவற்றை “ஆ” பகுதியிலிருந்து தெரிந்து இணைக்குக.

| அ | ஆ |
|---|---|
| 16. கடகக் கோடு | 0 பாகை ($0^0$) |
| 17. செவ்வாய்க் கோள் | நீலக் கோள் |
| 18. புவி | 62 |
| 19. சனிக் கோள் | பொபோஸ் |
| 20. மத்தியக் கோடு | வட அகலாங்கு 23 $\frac{1}{2}$ |

( 2 x 20 = 40 புள்ளிகள்)

## பகுதி – II

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **மேலும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக.**
- **மொத்தமாக 5 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.**

(1). வழங்கப்பட்டுள்ள உலக புறவுருவப் படத்தில் தரப்பட்டுள்ள இடங்களைக் குறித்துக் காட்டுக.

i. மத்தியக் கோடு
ii. ஆசியாக் கண்டம்
iii. கிறீன்விச் கோடு
iv. பசுபிக் சமுத்திரம்
v. கிரீன்லாந்து
vi. பாக்கு நீரிணை
vii. அவுஸ்திரேலியாக் கண்டம்
viii. செங்கடல்

( 16 புள்ளிகள்)

kalvi.lk

(2). i). ஞாயிற்றுத் தொகுதியிலுள்ள சிறிய கோளினையும் பெரிய கோளினையும் முறையே பெயரிடுக.

(02 புள்ளிகள்)

ii). எறிகற்களைக் கொண்ட வலயத்திற்கும் சூரியனுக்கும் இடையேயான கோள்களை முறையே பெயரிடுக.

(04 புள்ளிகள்)

iii). வெள்ளிக் கோளுக்குரிய விசேட அம்சங்கள் ஐந்தினைத் தருக.

(05 புள்ளிகள்)

(3). i). ஞாயிற்றுத் தொகதியிலுள்ள சிறு கோள்கள் இரண்டினை பெயரிடுக.

(02 புள்ளிகள்)

ii). கீழ் தரப்பட்டுள்ள சுழற்சிக் காலத்தினைக் கொண்டுள்ள கோள்களைப் பெயரிடுக.

(அ). மணித்தியாலம் 15.7

(ஆ). மணித்தியாலம் 1407.6


(04 புள்ளிகள்)

iii). ஞாயிற்றுத் தொகுதி தொடர்பான பல்வகைப்பட்ட நம்பிக்கைகள் 5 குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

Education
கல்வி
அத்யாபன

(4).



i). இப்படத்தில் காட்டப்பட்டுள்ள கோளின் பெயர் என்ன?

(02 புள்ளிகள்)

ii). இக் கோளுக்கு இருபுறங்களிலும் உள்ள கோள்களின் பெயர்களைத் தருக.

(04 புள்ளிகள்)

iii). ஞாயிற்றுத் தொகுதி தொடர்பான சமய பண்பாட்டு விடயம் ஒன்றினைக் குறிப்பிட்டு அது தொடர்பாக 5 வாக்கியங்களை எழுதுக.

(05 புள்ளிகள்)

(5). i). புவியின் சுழற்சி , சுற்றுகை காலங்களை சரியாகக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)

ii). உயிரினங்கள் வாழ்வதற்கு உகந்த கோள் எனும் வகையில் புவியில் காணப்படும் சிறப்பம்சங்கள் 4 குறிப்பிடுக.


(04 புள்ளிகள்)

iii). புவியின் மாதிரி கோளத்தினை வரைந்து கீழ்தரப்பட்டுள்ள அகலக் கோடுகளை கறித்துக் காட்டுக.

(அ). மத்திய கோடு      (இ). மகரக் கோடு

(ஆ). கடகக் கோடு      (ஈ). ஆட்டிக் வலயம்

(05 புள்ளிகள்)

(6). 

i). எதிரில் காட்டப்பட்டுள்ள நிர்மானம் எது?

(02 புள்ளிகள்)

ii). ஆரம்பக் காலத்தில் புவி, ஞாயிற்றுத் தொகுதி, பிரபஞ்சம் தொடர்பாக தகவல்களை வெளியிட்ட உலக பிரசித்திபெற்ற அறிஞர்கள் நால்வரின் பெயர்களைத் தருக.

(04 புள்ளிகள்)

iii). ஞாயிற்றுத் தொகுதியின் மிக முக்கிய மூலமாக கருதும் சூரியனின் முக்கிய பண்புகள் ஐந்தினைக் குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)



# GRADE 6,7,8

## STUDY WITH US..!

# MATHS

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் கணித பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

| TAMIL MEDIUM | ENGLISH MEDIUM |
|---|---|
| 850/= Monthly | 1000/= Monthly |

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page